# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, விபச்சாரத்துக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க விபச்சாரத்துக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயச் சட்டம்*

*[2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ.-ஓ. 49/2003*
*4827*

**விபச்சாரத்துக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்துதலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான பிஒதெஆக (சார்க்) சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*விபச்சாரத்துக்காகப் பெண்களையும், சிறுவர்களையும் விலைப் படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயமொன்று, ஈராயிரத்து இரண்டாம் ஆண்டு சனவரி மாதத்தில் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்கு ஆசியக் கழகத்தினால் கத்மண்டுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாதலாலும் :*

*அத்துடன் இலங்கை அரசாங்கம், ஈராயிரத்து இரண்டாம் ஆண்டு சனவரி ஐந்தாம் நாளன்று மேற்கூறப்பட்ட சமவாயத்துக்குக் கையொப்பமிடுநராக வந்ததாதலாலும் :*

*அத்துடன் இலங்கையில் மேற்கூறப்பட்ட சமவாயத்தின் ஏற்பாடு களுக்குப் பயன்கொடுப்பதற்கான சட்ட ஏற்பாட்டைச் செய்வது இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடாக உள்ளதாதலாலும் :*

*ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

*1. இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, விபச்சாரத் துக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப்பின்னர் "சமவாயம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002, சனவரி 05 ஆம் தேதியன்று கத்மண்டுவில் கையொப்பமிடப்பட்ட விபச்சாரத்துக்காகப் பெண்களையும், சிறுவர்களையும் விலைப்படுத்தலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான சமவாயம் இலங்கை தொடர்பில் எத்தேதி யன்று வலுவுக்கு வருகின்றதோ அத்தேதியாக கசெற்றில் வெளி யிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் அத்தாட்சிப்படுத்துகின்ற அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.*

2 –PL 000371 – 1,250 (2005/06)

விபச்சாரத்துக் காகப் பெண்களையும், சிறுவர்களையும் விலைப்படுத்து தல் என்ற தவறு.

**2.** (1) விபச்சாரத்துக்காகப் பெண்களையும், சிறுவர்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது அதனோடு தொடர்பு பட்ட ஏதேனும் கருமத்துக்காக ஏதேனும் கட்டிடத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை -

(i) வைத்திருக்கின்றவரான, பேணுகின்றவரான அல்லது முகாமை செய்கின்றவரான ;

(ii) அதனை அறிந்துகொண்டு நிதியளிக்கின்றவரான அல்லது நிதியளித்தலில் பங்குபற்றுகின்றவரான ; அல்லது

(iii) அதனை அறிந்துகொண்டு கூலிக்குக் கொடுக்கின்றவரான அல்லது வாடகைக்கு விடுகின்றவரான ;

எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தவறொன்றை -

(அ) புரிவதற்கு எத்தனிக்கின்றவரான,

(ஆ) புரிவதற்கு உதவுகின்றவரான அல்லது அதற்கு உடந்தையளிக்கின்றவரான,

(இ) புரிவதற்குச் சதிசெய்கின்றவரான,

எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) (அ) இப்பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்தாண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனையுடனும் குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றமானது, தவறின் தன்மையைக் கவனத்திற் கொண்டு, (அ) என்னும் பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றவகையாகப் பாதிப்புற்றவருக்குச் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டை அறவிடலாம். நட்டஈட்டைச் செலுத்தத் தவறும் விடயத்தில், ஐந்தாண்டுகளுக்கு நீக்கக்கூடிய மேலதிக மறியற்றண்டனைக் காலமொன்று விதிக்கப்படலாம்.

(இ) தவறானது அடுத்துப் பின்னரானவொரு சந்தர்ப்பத்தில் புரியப்படும் விடயத்தில், தவறாளர், அத்தவறு தொடர்பில் குறித்துரைக்கப்படுகின்றவாறான இருமடங்குத் தண்டனையுடனும் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வுட்பிரிவில், "உடந்தை" மற்றும் "சதி" என்பன, முறையே தண்டனைச் சட்டக்கோவையின் 100, 101 மற்றும் 113அ, ஆகிய பிரிவுகளிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளை மேல்நீதிமன்றம் விளங்குதல்.

**3.** (1) கொழும்பில் நடாத்தப்படும் இலங்கையின் மேல் நீதிமன்றம் அல்லது மேல்மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட, கொழும்பில் நடாத்தப்படும் மேல்நீதிமன்றம், வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தவறுகைளை கேட்பதற்கும், விளங்குவதற்கும், தண்டிப்பதற்கும் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயலொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மேல்நீதிமன்றம், அத்தகைய தவறு இலங்கையினுள் புரியப்பட்டதென்றாற்போன்று அதனை விளங்குவதற்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் நியாயாதிக்கமுடையதாதல் வேண்டும் :—

(அ) அத்தகைய செயலைப் புரிந்த ஆள் இலங்கையில் இருப்பின் ;

(ஆ) அத்தகைய செயல் இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது அவரது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டுள்ளவரான நாடற்ற ஆளொருவரினால் புரியப்படின் ; அல்லது

(இ) எவ்வாள் தொடர்பாகத் தவறானது புரியப்பட்டுள்ளதெனச் சார்ந்தப்படுகின்றதோ அவ்வாள் இலங்கைப் பிரசையொருவராக இருப்பின்.

உக்கிரமாக்கும் சூழ்நிலைகள்.

**4.** இரண்டாம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் கீழான தவறொன்று –

(அ) (i) பெண்களையும்களையும் சிறுவர்களையும் விலைப் படுத்துதலை உட்படுத்துகின்ற ஒழுங்கமைவான குற்றஞ்சார் குழுவின் உறுப்பினரொருவராகவுள்ளவரான அல்லது அதன் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவராகவுள்ளவரான ;

(ii) ஏனைய சர்வதேச ஒழுங்கமைவான குற்றஞ்சார் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவராகவுள்ளவரான ;

(iii) தவறைப் புரிவதில் வன்செயலைப் புரிந்துள்ளவராகவுள்ளவரான அல்லது படைக்கலங்களைப் பயன்படுத்தியவராகவுள்ளவரான ;

(iv) பகிரங்கப் பதவியை வகிப்பவராகவுள்ளதுடன் அதன் பயனைக்கொண்டு அப்பதவிக்குரிய தத்துவங்களையும் அதிகாரங்களையும் முழுமையாகத் துஷ்பிரயோகஞ் செய்கின்றவராகவுள்ளவரான ;

(v) சிறுவர்களைப் பாதிப்பதில் அல்லது விலைப் படுத்துவதில் சம்பந்தப்பட்டவராகவுள்ளவரான ; அத்துடன்

(vi) குறிப்பாக இதேபோன்ற தவறுகளுக்கு முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவராகவுள்ளவரான,

(இதனகத்துப்பின்னர் "தவறாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளொருவரினால், அல்லது

(ஆ) ஒரு கட்டுக்காப்புச்சார் நிறுவனத்தில் அல்லது ஒரு கல்விச்சார் நிறுவனத்தில் அல்லது சமூக வசதியேற் பாட்டிடத்தில் அல்லது அவற்றின் மிகக்கிட்டிய சுற்றாடலில் அல்லது கல்விசார், விளையாட்டு, சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளுக்காகச் சிறுவர் களும் மாணவர்களும் வருகைதரும் ஏனைய இடங்களில்,

புரியப்படுகின்றவிடத்து, புரியப்பட்ட தவறுகளின் பாரதூரமான தன்மையைக் கருத்திற்கொண்டு, 2 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகளின்மீது மேல்நீதி மன்றம் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அத்தகைய நிகழ்வுகள் அதனால் கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் புரியப்பட்ட தவறுகளுக்காகக் கைதுசெய்யப்பட்ட குறித்தசில ஆட்களுக்குள்ள உரிமைகள்.*

**5**. இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள்,-

(அ) அவர் எந்த அரசின் நாட்டவரொருவராகவுள்ளாரோ அந்த அரசின் அல்லது அவரது உரிமைகளைப் பாது காப்பதற்கு எந்த அரசு வேறுவகையில் உரித்துடைய தாகவுள்ளதோ அந்த அரசின் மிக அண்மையிலுள்ள தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராகவிருப்பின், அவர் எந்த அரசின் ஆள்புலத்தில் வழமையாக வதிந்தாரோ அந்த அரசின் மிக அண்மையிலுள்ள தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வதற்கும் ; அத்துடன்

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவர் அவரைச் சென்று பார்ப்பதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடு கடத்தற் சட்டத்துக்கான திருத்தம்.*

**6**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தற் சட்டமானது, அச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் ஆ வுக்கு நேர்முன்னர் பின்வரும் விட யத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது —

"(47) 2005 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, விபச்சாரத்துக் காகப் பெண்களையும் சிறுவர்களையும் விலைப் படுத்துதலைத் தடுத்தலும் எதிர்த்தலும் மீதான பிஒதெஆக (சார்க்) சமவாயத்தினால் மேவப்பட்ட தவறொன்று.".

*சமவாய அரசுகளுடன் உள்ளனவான நாடுகடத்தல் ஒழுங்கேற்பாடுகள், அட்டவணையிலுள்ள தவறுகளுக்கு ஏற்பாடு செய்வனவாகக் கருதப்படுதல்.*

**7.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று வலுவிலுள்ளதும், ஏதேனும் சமவாய அரசுகளுடன் இலங்கை அரசாங்கத்தினாற் செய்யப்பட்டதுமான நாடுகடத்தல் ஒழுங்கேற்பாடொன்று இருக்கின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான அட்டவணையிற்குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் நாடுகடத்தல் ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அமைச்சர், அட்டவணையிலுள்ள தவறுகள் தொடர்பில், இலங்கைக்கும் குறித்தசில சமவாய அரசுகளுக்கும் இடையேயான நாடுகடத்தல் ஒழுங்கேற்பாடொன்றாகச் சமவாயத்தைக் கொள்ளலாம்.*

**8.** ஏதேனும் சமவாய அரசுடன் இலங்கை அரசாங்கத்தினாற் நாடுகடத்தல் ஒழுங்கேற்பாடெதுவும் செய்யப்பட்டு இல்லாதவிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் நாடுகடத்தற்காக ஏற்பாடு செய்து அச்சமவாய அரசுடன் இலங்கை அரசாங்கத்தினாற் செய்யப்பட்ட நாடுகத்தல் ஒழுங்கேற்பாடொன்றாகச் சமவாயத்தைக் கொள்ளலாம்.

*எந்த ஆட்களை நாடுகடத்துவதற்காகவேண்டுகோளொன்று விடுக்கப்படுகின்றதோ அந்த ஆட்களுக்கெதிரா எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கின்ற அரசுக்கு அறிவிப்பது அமைச்சரின் கடமையாதல்.*

**9.** இச்சட்டத்துக்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை நாடுகடத்துவதற்காக ஒரு சமவாய அரசின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவரை நாடு கடத்துவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி வேண்டுகோள் விடுக்கின்ற அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*சமவாய அரசுகளுக்கான உதவி.*

**10.** (1) ஈராயிரத்து இரண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்து அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அவசியமாகும் இடத்தெல்லாம் இலங்கை அரசாங்

கத்துக்கும், ஒன்றில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையின் மூலம் அமைச்சரினாற் குறித்துரைக்கப்பட்ட பொதுநலவரசு நாடுகளாகவுள்ள அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடுகள் அல்லாத நாடுகளுடன் உடன்படிக்கை யொன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்தப் பொதுநலவரசு நாடுகள் அல்லாத நாடுகளாகவுள்ள ஏனைய அரசுகளுக்கும் இடையே உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட பொது நலவரசு நாடொன்றாகவிராத அல்லது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடொன்றாகவிராத நாட்டுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்தப் பொதுநலவரசு நாடொன்றாக விராத நாடொன்றின் விடயத்தில், அப்போது, (சான்றையும் கூற்றுக்களையும் பெறுதல், மன்றாணை முதலியவற்றைச் சேர்ப்பித்தல் மற்றும் தேடுகைகளை நடாத்துதல் என்பன தொடர் பான உதவியுட்பட), பிஒதெஆக (சார்க்) சமவாயத்தின் கீழான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்பட்ட அளவுக்கு 2 ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்து அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அவசிய மாகக் கூடியவாறாக, ஒரு சமவாய நாட்டுக்கு அத்தகைய எல்லா உதவிகளையும் அளித்தல் அரசாங்கத்தின் கடமையாதல் வேண்டு மென்பதுடன், அமைச்சர்மூலம் ஒரு சமவாய நாட்டிடமிருந்து அத்தகைய எல்லா உதவிகளையும் பெறுவதற்கும் அது வேண்டுகோள் விடுக்கலாம்.

(3) ஒரு சமவாய அரசுக்கு உதவியளித்தலானது, அமைச்சர் தகுதியென எண்ணுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனை களுக்கமைய செய்யப்படலாம்.

அமைச்சர் பணிப்புகளை வழங்குதல்.

**11.** (1) அமைச்சர், காலத்துக்குக் காலம், இச்சட்டத்தில் அடங்கியுள்ளவாறான சமவாயத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் செயற்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்கலாம்.

(2) அமைச்சர், அவசியமானவிடத்து, அத்தகைய நோக்கத்துக்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்களில் அவசியமானவிடத்து இடவசதிகளையும் புகலிடத்தையும் ஏனைய வசதிகளையும் விலைப்படுத்தற்பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வழங்குவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்த கைய பணிப்பை விடுத்தல் வேண்டும்.

விலைப்படுத்தலை எதிர்ப்பதற்கு அமைச்சர் மேலதிக வழிமுறைகளை எடுக்கலாம்.

**12.** அமைச்சரானவர் –

(அ) சமவாயத்தின் கீழான தவறுகள் பற்றிச் சட்டவலுவுறுத்தல் முகவர் நிலையங்களுக்கும் நீதித்துறைக்கும் இடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படக்கூடிய ஏதேனும் பிராந்தியச் செயலணிக்கு அத்தகைய அலுவர்களை நியமிப்பதற்கும் ;

(இ) விலைப்படுத்துதலில் சம்பந்தப்பட்டுள்ள மூலங்கள் தொடர்பிலும் வெவ்வேறு பிரயாண வழிகள் மூலம் அவர்களின் நடவடிக்கை முறைதொடர்பிலும் ஆன தகவலைப் பகிர்வதற்கும் (இப்பந்தியிலான தகவல், புலனாய்வின்போது பதியப்பட்ட குறிப்பிட்ட விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்) ;

(ஈ) தொழில் வழங்கப்படுமென்ற தோறணையில் பெண்களும் சிறுவர்களும் விலைப்படுத்தப்படுதலைத் தடுப்பதற்கு வெளிநாட்டு தொழில் சம்பந்தப்பட் டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக அவசியமான வழிமுறைகளை எடுப்பதற்கும் ;

(உ) பெண்கள் பற்றி எதிர்மறையான சாயல்களை வெளிப்படுத்துதல் உட்பட, பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்துதல் பற்றிய பிரச்சினையையும் அதன் அடிப்படையான காரணங்களையும் பிரசித்தப்படுத்துவதற்கு வெகுசனத்தொடர்புச் சாதன வெளிக்காட்டுகை என்ற வகையான அல்லது வேறு வழிமுறைகள் மூலம் விழிப்புணர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ;

(ஊ) விலைப்படுத்தற்கான மூலப் பிரதேசங்களென அறியப் பட்ட பிரதேசங்களில் முயற்சிகள் எடுக்கப்படுவதைத் தடுத்தலும் அபிவிருத்தி செய்தலும் மீது நோக்கைச் செலுத்துவதற்கு அத்தகைய வேறு வழிமுறைகளை எடுப்பதற்கும் ;

(எ) எல்லை கடந்த விலைப்படுத்தலால் பாதிக்கப்பட் டோரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதற்கான நடபடிகளை எடுப்பதற்கும், அவசியமானவிடத்து சட்ட மதியுரையையும் சுகாதாரக் கவனிப்பையும் வழங்குவதற்கும் ;

(ஏ) தானாகவோ அல்லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப் புக்களின் உதவியுடனோ, விலைப்படுத்தலுக்குப் பலியானோருக்கான அத்தகைய புகலிட மற்றும் புனர் வாழ்வு இடங்களை அல்லது நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் ;

(ஐ) பாதிப்புற்றோருக்கு ஆலோசனையும் வேலைப் பயிற்சியும் வழங்குவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்வதற்கும்,

அவசியமானவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தலும், காலத்துக்குக்காலம் அத்தகைய பணிப்புகளை அல்லது வழிகாட்டு நெறிகளை வழங்குதலும் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**14.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத் தினாலொழிய –

"சிறுவர்" என்பது, பதினெட்டு வயதை அடைந்திராத ஆளொருவர் என்று பொருளாகும் ;

"விலைப்படுத்தற்கு உட்படுத்தப்பட்ட ஆட்கள்" என்பது, ஏமாற்றுதல், அச்சுறுத்தல், வலுக்கட்டாயப் படுத்துதல், ஆட்கடத்தல், விற்பனை செய்தல், மோசடியான திருமணம் செய்தல் அல்லது வேறெவையேனும்

சட்டவிரோதமான வழிவகைகள் மூலம் விலைப்படுத்துவோரினால் விபச்சாரத்தால் பாதிக்கப்பட்ட அல்லது வலோத்காரப்படுத்தப்பட்ட பெண்களும் சிறுவர்களும் என்று பொருளாகும் ;

"விபச்சாரம்" என்பது, வர்த்தக நோக்கங்களுக்காக ஆட்களைப் பாலியல் ரீதியில் பயன்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகஞ் செய்தல் என்று பொருளாகும் ;

"தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதல்" என்பது, சர்வதேச எல்லைப்புறங்களுக்கப்பால் விலைப்படுத்தப்படுவதற்கு உட்படுத்தப்பட்ட ஆட்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்புதல் என்று பொருளாகும் ;

"விலைப்படுத்துவோர்" என்பது, ஏதேனும் வகையினதான விலைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள், ஏதேனும் முகவர் நிலையம் அல்லது நிறுவனம் என்று பொருளாகும் ;

"விலைப்படுத்தல்" என்பது, விலைப்படுத்தப்படும் ஆளின் சம்மதத்துடனோ சம்மதமின்றியோ பணவகையான அல்லது வேறு பிரதிபயன்களுக்காக ஒரு நாட்டினுள் அல்லது அதற்கு வெளியே விபச்சாரத்துக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் இடம் பெயர்ததல், விற்பனை செய்தல் அல்லது வாங்குதல் என்று பொருளாகும்.

**அட்டவணை** (பிரிவுகள் 7, 8, 9)

(அ) பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பதுவதற்கான ஏதேனும் கட்டிடத்தை அல்லது வேறு இடத்தை அல்லது அதன் பாகத்தை வைத்திருத்தல், பேணுதல் அல்லது முகாமை செய்தல் ;

(ஆ) பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கான ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வேறு இடத்தின் அல்லது அதன் பாகத்தின் பயன்பாட்டுக்கு அறிந்துகொண்டு நிதியளித்தல் ;

(இ) பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கான ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வேறு இடத்துக்கு அல்லது அதன் பாகத்துக்கு நிதியளிப்பதில் பங்குபற்றுதல் ;

(ஈ) பெண்களையும் சிறுவர்களையும் விலைப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கான ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வேறு இடத்தை அல்லது பாகத்தை அறிந்துகொண்டு கூலிக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கு கொடுத்தல் ;

(உ) பந்திகள் (அ) முதல் (ஈ) வரையில் தரப்பட்டுள்ள தவறுகள் எவற்றையும் புரிய எத்தனித்தல் ;

(ஊ) பந்திகள் (அ) முதல் (ஈ) வரையில் தரப்பட்டுள்ள தவறுகள் எவற்றையும் புரிவதற்கு உதவுதல் அல்லது உடந்தையளித்தல் ;

(எ) பந்திகள் (அ) முதல் (ஈ) வரையில் தரப்பட்டுள்ள தவறுகள் எவற்றையும் புரிவதற்குச் சதிசெய்தல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*